**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S.126/2019**

**CNR.No.TNCB19000**

| **Deposition** | **:** | **C.W.1** |
|---|---|---|
| Name | : | சுபா |
| Father's / Husband's Name | : | சங்கர் |
| Village / முகவரி | : | சென்னை |
| Taluk / தாலுக்கா | : | சென்னை |
| Age / வயது | : | 39 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 4th February 2026

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிகிறேன். நான் கடந்த 2018 முதல் தடய அறிவியல் ஆய்வகத்தில் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் . 16.12.2022 ம் தேதியில் சார்பு நீதிமன்றத்திற்கு எல். ஆர். டிடி எண்.408/doc/2022 ன்படி பஞ்சாட்சரம் என்பவர் அறிக்கை அனுப்பி உள்ளார் என்றால் சரிதான் . மேலும் கூடுதலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கையொப்பங்கள் கொண்ட ஆவணங்கள் 2015 முதல் 2018 வரையிலான வருடத்திற்கான கூடுதல் ஆவணங்கள் இருந்தால் வேண்டுமென ஒப்பீடு ஆய்வு மேற்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று பஞ்சாட்சரம் துணை இயக்குனர் என்பவர் திருப்பி அனுப்பபட்டுள்ளது.

கடந்த 10.10.2023 ம் தேதியன்று கேட்கப்பட்ட கூடுதல் ஆவணங்களுடன் இணைத்து வழக்குத்துறையில் பெறப்பட்டு ஆவண எண்.221/2023 வழங்கப்பட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட கையொப்பங்களுக்கு A1 முதல் A16 வரை குறியீடு

கொடுக்கப்பட்டது. சர்ச்சைக்குரிய கையொப்பத்திற்கு Q என்ற குறியீடு கொடுக்கப்பட்டது. கைப்பெருக்கி மற்றும் வீடியோ ஸ்பெக்ட்ரம் காம்போ நெட்டர் ஆகிய கருவிகளை கொண்டு ஒப்பீடு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது . மேலும் கையொப்பங்களை பெரிதாக்கி புகைப்படங்கள் எடுத்து ஒப்பீடு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

<u>கருத்துரை விபரம்:</u>

A1 முதல் A16 முடிய உள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட கையொப்பங்களை எழுதிய நபர் சர்ச்சைக்குரிய கையொப்பமான Q எழுதவில்லையென அறிக்கை வழங்கியுள்ளோம். அந்த தடய அறிவியல் ஆய்வறிக்கை நீ. ம.சா. ஆ.1 ஆகும். அந்த அறிக்கை 3 பக்கங்கள் கொண்டது.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நாங்கள் கைப்பெருக்கி மற்றும் வீடியோ ஸ்பெக்ட்ரம் காம்போ நெட்டர் ஆகிய கருவிகளை கொண்டு ஆய்வு செய்ததை ஆய்வறிக்கையில் குறிப்பிடவில்லையென்றால் சரிதான் . Digital Zooming, Pictorial Comparisons Microscopic Magnification போன்ற முறையில் நான் ஆய்வறிக்கையை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல . அனைத்து உபகரணங்களை கொண்டும் ஒப்பீடு செய்யப்பட்டது . அவ்வாறு செய்திருந்தால் நான் எனது ஆய்வறிக்கையில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல.

எனது ஆய்வின் முடிவில் சொல்லப்பட்ட முதல் காரணம் The Skill of writing என்பது பொதுவானது . அதற்கென்று தனிப்பட்ட அர்த்தங்கள் இல்லையென்றால் சரிதான் . 15.02.2024 தேதியிட்ட அறிக்கையில் 1ம் பத்தியில் மேற்படி சர்ச்சைக்குரிய கையெழுத்தும் ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்தும் ஒன்று இல்லை என்று கூறியுள்ளேனே தவிர Skill of writing என்ற காரணத்திற்கு எந்த விளக்கமும் சொல்லவில்லை என்றால் சர்ச்சைக்குரிய கையொப்பம் பெறப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட கையொப்பங்களோடு ஒப்பீடு செய்ததில் அந்த நபரின் எழுத்துத் திறனில் இருந்து வேறுபட்டு காணப்பட்டுள்ளது என்று அறிக்கையில் காரணத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருவரால் கையொப்பமிட்ட கையொப்பம் மறுபடியும் கையொப்பமிடும்போது

சிறு சிறு மாறுபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது அது இயல்பு . அது எத்தனை கால இடைவெளியில் மாற்றம் வரலாம் என்றால் அப்போதே கையெழுத்து செய்தாலும் சிறுசிறு மாறுபாடுகள் ஏற்படவாய்ப்புள்ளது . 6 மாத கால இடைவெளி இருந்தால் ஒரேமாதிரியாக இருக்க வாய்ப்பில்லை என்றால் ஒரு நபர் இடக்கூடிய கையொப்பங்களில் அச்சடித்தாற்போல் இருக்காது . அவற்றுள் இயற்கையான மாறுபாடுகள் காண முடியும் . ஒரு மனிதனின் அந்தந்த சூழ்நிலையில் கையொப்பங்கள் மாறுபாடு ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்பில்லை . இயற்கையான மாறுபாடு உண்டா என்பதை கண்டுபிடிப்பதற்கு Pen pressure variation மற்றும் Overlapping, Natural fluency Hesitation Slow speed tremor கொண்டு தான் ஆய்வு செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

மேற்கூறிய Hesitation என்பதை பொறுத்து சமகால சூழ்நிலையை பொறுத்து மாறுபடலாம் என்றால் அது தனிநபருடைய எழுத்து திறனை பொருத்தது. Slow speed tremor என்பது ஒருவருக்கு நடுக்கம் பயமோ இருந்தால் கையெழுத்து மாறுபடும் என்றால் அந்த நபருடைய கையெழுத்து குணாதிசியங்களில் வேறுபாடுகள் இருக்காது. Strokes மாறுபாடு இருக்கும் என்றால் இயற்கையான மாறுபாடுகள் மட்டுமே காணப்படும். நான் மேற்படி அறிக்கையில் கொடுத்த 4-வது காரணம் சர்ச்சைக்குரிய கையெழுத்திற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

அவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணங்களில் முத்து சிறுசேமிப்பு திட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணத்தில் 10.03.2018 தேதியிட்ட சீட்டு எடுத்த விபரம் கொண்ட ஆவணத்தில் மேற்படி சங்கீதா என்பவரின் கையெழுத்தில் இறுதியாக a தெளிவாக உள்ளது. ஆனால் New Jewellery ரசீது என்ற ஆவணத்தின் அடியில் கொடுக்கப்பட்ட கல்யாண் ஜூவல்லர்ஸ் என்ற கடையில் வழங்கப்பட்ட ரசீதில் மேற்படி சங்கீதா என்பவரின் கையெழுத்தில் a என்ற எழுத்து அடையாளம் காணமுடியாத அளவிற்கு மேலும் ஒரு கோடுதான் உள்ளது என்றும் அதில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணங்களிலேயே கையெழுத்துக்கள் மாறுபட்டுள்ளது என்று சொன்னால் அது இயற்கையான மாறுபாடு மட்டும்தான்.

ஒரு எழுத்திற்கு பதிலாக வெறும் கோடு இருப்பது இயற்கையான மாறுபாட்டிற்கு அடிப்படையில் வராது என்றால் சரியல்ல . நான் 4-வது காரணத்தில்

**சொல்லப்பட்ட The relative sizing என்ற விளக்கத்திற்கு முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கையெழுத்து ஆய்வறிக்கை செய்ததின் கருவிகளின் துல்லியத்தின் சதவீதம் 65 முதல் 70 சதவீதம்தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணத்தில் 2018 தேதியிட்ட ஒப்பந்த ரத்து பத்திரம் போதாது என்று கூறி அதன்பின்னிட்டு மீண்டும் அதே பத்திரத்தோடு மற்ற ஆவணங்களை கொண்டு சரிவர ஆய்வு செய்யாமல் எந்த வகையில் ஆய்வு செய்தோம் என்ற காரணங்களைக் கூறாமல் அதற்கான சரியான விளக்கங்களையும் அளிக்காமல் ஒரு தவறான ஆய்வறிக்கையை இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி உள்ளேன் என்றால் சரியல்ல . இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.**

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/- K.Palanivel,

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்.

**சாட்சியின் கையொப்பம்**